செய்தி வெளியீடு எண்:366 நாள் : 05.07.2014

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.6.2014 அன்று தலைமைச் செயலகத்தில், 10 கோடியே 53 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 100 வனத்துறை கட்டடங்களையும், கடலூர் மாவட்டத்தில் 1 கோடியே 89 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தையும் திறந்து வைத்தார்கள்.

நாட்டின் வளம் காடுகளின் வளத்திற்கு ஏற்ப அமையும்; காடுகளின் பராமரிப்பும், பெருக்கமும் மனித இனத்திற்கு மட்டுமன்றி அனைத்து உயிர்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்பதை கருத்தில் கொண்டு, மாநிலத்தின் வன உயிரின பாதுகாப்பிற்கும், வன வளர்ச்சிப் பணிகளுக்கும், வனத்துறை கள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் மேம்பாட்டிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை, விழுப்புரம், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி, தருமபுரி, திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்களில் 3 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 மாவட்ட வன அலுவலர் குடியிருப்புகள், 7 வனச்சரக அலுவலர் குடியிருப்புகள், 3 வனவர் குடியிருப்புகள், 17 ஒருங்கிணைந்த வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் குடியிருப்புகள் என 29 குடியிருப்புகள்;

வேலூர், விருதுநகர், புதுக்கோட்டை, பெரம்பலூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய 11 மாவட்டங்களில் 2 கோடியே 67 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 மாவட்ட வன அலுவலகக் கட்டடங்கள் (District Forest Offices), 2 கோட்ட வன அலுவலக கட்டடங்கள் (Divisional Forest Offices) மற்றும் 11 வனவிரிவாக்க அலுவலகக் கட்டடங்கள் என 15 அலுவலகக் கட்டடங்கள்;

வேலூர், சேலம், ஈரோடு, திருநெல்வேலி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், விழுப்புரம், தருமபுரி ஆகிய 10 மாவட்டங்களில் 1 கோடியே 81 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 வனச்சரக அலுவலகக் கட்டடங்கள்;

திண்டுக்கல், திருநெல்வேலி, விழுப்புரம், திருப்பூர் ஆகிய 4 மாவட்டங்களில் 30 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 8 வனத்துறை சோதனை சாவடிகள்;

காஞ்சிபுரம், திண்டுக்கல், வேலூர் ஆகிய மாவட்டங்களில் 74 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வன ஓய்வு விடுதிகள்; வேலூர் மாவட்டத்தில் 41 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஜமுனாமரத்தூர் சுற்றுலா மற்றும் கருத்து விளக்க மையம்;

கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், தேனி, ஈரோடு ஆகிய 5 மாவட்டங்களில் 54 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 13 வேட்டை தடுப்பு முகாம்கள்; திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 43 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 கண்காணிப்பு கோபுரங்கள்; தஞ்சாவூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 9 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வாகன நிறுத்துக்கூடங்கள்;

என மொத்தம் 10 கோடியே 53 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 100 வனத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு சிப்காட் வளாகத்தில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில், 6071 சதுர அடி கட்டட பரப்பளவுடன், தரைத்தளத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தொழில்நுட்பப் பிரிவுக்கென தனி அறைகள், நிர்வாகப் பிரிவு, வரவேற்பாளர் அறை, கணக்கு பிரிவு மற்றும் பொதுக்கூடம்; முதல் தளத்தில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், ரசாயனங்கள், கழிவுநீர், மாசுக் காற்று ஆகியவற்றை பரிசோதிப்பதற்கு தனி ஆய்வுக்கூடம், கழிவுநீர் மாதிரிகளை பகுப்பாய்வு

செய்ய கூடம்; இரண்டாவது தளத்தில் விஞ்ஞானிகள் மற்றும் பணியாளர்களுக்கான ஓய்வு அறை ஆகியவைகளுடன் குடிநீர் வசதி, மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்வு தளம், வாகனங்கள் நிறுத்துமிடம், பாதுகாவலர் அறை உள்ளிட்ட வசதிகளுடன் 1 கோடியே 89 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை சார்பில் மொத்தம் 12 கோடியே 43 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு எம்.எஸ்.எம். ஆனந்தன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு தோப்பு என்.டி. வெங்கடாசலம், தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை முதன்மைச் செயலாளர் திரு ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் / முதன்மைச் செயலாளர் திரு கி. ஸ்கந்தன், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் திரு வினோத் குமார், இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 5.7.2014